*1*

அறிமுகம்

# எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஊக்கமூட்டுதலுக்கான ஒரு வார்த்தை

*நீங்கள் எப்போதாவது ஊக்கம் இழந்து போகுதலை உணர்ந்திருக்கிறீர்களா? நம்மில் பெரும்பான்மையானவர்கள், அவ்வப்போது ஊக்கம் இழந்துபோவதாக உணருகிறோம்.[1] ஊக்கமிழந்து போகுதலை நீக்கிப்போட வடிவமைக்கப்பட்ட வேதாகமப் புத்தகம் ஒன்றைப் பற்றிய படிப்பை நாம் தொடங்குகிறோம்: எபிரெயருக்கு எழுதிய நிருபம். எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி நீங்கள் அவ்வாறு நினைக்காது இருக்கலாம், ஆனால் நாம் காணப்போகிறபடி, அதுவே அந்தப் புத்தகத்தின் நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. இந்த அறிமுகப் பாடத்தில், இந்த "ஊக்கமூட்டுதலின் வார்த்தை"யைப் புரிந்துகொள்ளவும், மதிக்கவும் மற்றும் இதிலிருந்து பயனடையவும் உங்களைத் தயார் செய்வதற்காக, வரவிருக்கும் பாடங்கள் மீதான பின்னணிகள் சிலவற்றை நான் கொடுப்பேன்.*

## புத்திகூறுதல், ஆறுதல்படுத்துதல் அல்லது ஊக்கமூட்டுதல்?

1985ல் நான், எபிரெயருக்கு எழுதிய நிருபம் பற்றி நெய்ல் R. லைட்ஃபூட் அவர்களால் போதிக்கப்பட்ட பட்டப்படிப்பு வகுப்பில் இருந்தேன். சகோதரர் லைட்ஃபூட் அவர்கள், "எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைப் படிக்கத் தொடங்க வேண்டிய இடம் 13ம் அதிகாரம் ஆகும்" என்று கூறி இந்தப் பாடத்தைத் தொடங்கினார்.[2] 13:22ல் எபிரெயருக்கு எழுதிய ஆசிரியர், "சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின *இந்தப் புத்திமதியான வார்த்தைகளை* நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

"புத்திமதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, "*parakaleo*" என்பதன் பெயர்ச்சொல் வடிவமான "*parakalesis,*" என்பதில் இருந்து வந்துள்ளது. *Parakaleo* என்பது "பக்கமாக அழைத்தல்" என்று அர்த்தப்படுகிறது (*para* ["பக்கமாக"] கூட்டல் *kaleo* ["அழைக்க"])[3] - உதவிக்காகப் பக்கமாக அழைத்தல். இவ்வார்த்தை, "புத்திமதிகூறுதல்" (எபிரெயர் 13:22) அல்லது "ஆறுதல் அளித்தல்" (1 தெசலோனிக்கேயர் 4:18) என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். எபிரெயர் 10:25ல் NASB வேதாகமம், இவ்வார்த்தையின் வினைச் சொல் வடிவம் ஒன்றை "ஊக்கமூட்டுதல்" என்று மொழிபெயர்க்கிறது. "ஊக்கமூட்டுதல்" என்ற வார்த்தை, "புத்திமதி கூறுதல்" என்ற கருத்தையும் "ஆறுதல் அளித்தல்" என்ற

கருத்தையும் சேர்த்துச் சூழ்வதாக இருக்க முடியும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் சிலவேளைகளில், இருதயம் சோர்ந்து போயிருந்த தமது வாசகர்களை ஆறுதல் படுத்தும் வார்த்தைகளைக் கொண்டு ஊக்கமூட்டினார். இருப்பினும் அவர் புத்திமதியின் பலத்த வார்த்தைகளைக் கொண்டு அவர்களுக்கு அறைகூவல் விடவும் ஊக்கப்படுத்தவும் செய்தார்.

எனது மகள்கள் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், நான் எப்போதுமே அவர்களை ஊக்குவிக்க விரும்பினேன். சிலவேளைகளில் *ஆறுதலின் வார்த்தைகள்* முறையானவைகளாக இருக்கும், ஆனால் சிலவேளைகளில் அவர்களுக்கு *புத்திமதி கூறுதலின்* வார்த்தைகள் தேவைப்படும் - அவர்கள் குறிப்பிட்ட துறைகளில் முன்னேற்றம் அடைய முடியும் என்ற எனது தைரியத்தை நான் பகிர்ந்து கொண்டேன். பிள்ளைகள் என்ற வகையில் நம்முடன் தேவன் செயல்படுகிறார் (காண்க எபிரெயர் 12:5, 7). நாம் ஊக்கம் இழந்து போகும்போது, நமக்கு ஆறுதலின் வார்த்தைகள் தேவைப்படுகின்றன; ஆனால் சிலவேளைகளில் நாம், பலமான புத்திமதி கூறுதலினாலும் பயன் அடைகிறோம்.

## பெற்றுக்கொண்டவர்கள், எழுதியவர் மற்றும் பொருளடக்கம்

***பெற்றுக்கொண்டவர்கள்: ஊக்குவித்தல் தேவைப்பட்டவர்கள் யார்?***

"எபிரெயருக்கு" என்பது இந்தப் புத்தகத்தின் பழந்தலைப்பாக உள்ளது. எபிரெயம் என்பது யூதர்களால் பேசப்பட்ட தனித்தன்மை வாய்ந்த மொழியாக இருந்தது. "எபிரெயர்" என்பது யூத மக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. வசனப்பகுதியில் உள்ள பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளும் விவரிப்புகளும்,[4] இது யூதக்கிறிஸ்தவர்களை மனதில் கொண்டு எழுதப்பட்டிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன.

இருப்பினும் இது எங்குமிருந்த யூதக்கிறிஸ்தவர்களுக்கு அல்ல, ஆனால் குறிப்பிட்ட யூதக் கிறிஸ்தவர்களுக்கே எழுதப்பட்டது (காண்க 13:17). இவர்கள், இதை எழுதியவரால் தனிப்பட்ட முறையில் அறியப்பட்டிருந்த கிறிஸ்தவர்களாக இருந்தனர் (காண்க 13:18, 19, 23). மற்றும் இந்தப் புத்தகம் சபைக்குழுமம் முழுவதற்குமானதாக இராமல், சபைக்குழுமத்திற்குள் இருந்த ஒரு குழுவினருக்கு எழுதப்படுவதை நோக்கங்கொண்டிருந்தது என்பது தெளிவு (காண்க 13:17, 24).

இந்த யூதக்கிறிஸ்தவர்கள் மிகச்சரியாக யார் அல்லது இவர்கள் எங்கே வாழ்ந்தனர் என்று நாம் அறிவதில்லை,[5] ஆனால் நமது வசனப்பகுதியானது அவர்களைப் பற்றிய பல விபரங்களை வெளிப்படுத்துகிறது. அவர்கள் சற்றுக் காலத்திற்கு முன்னர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்திருந்த (5:12; 10:32) இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களாக இருந்தனர் (2:3). அவர்கள் உற்சாகத்துடன் கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்கியிருந்தனர் (6:10; 10:33, 34) ஆனால் ஊக்கம் இழந்து போனவர்களாகி இருந்தனர். அவர்கள் ஆராதனை ஊழியத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை (10:25). அவர்கள் கடைசியில், மூப்பர்களின் நடத்துவத்துவத்தைப் பின்பற்ற தயங்கினர் (13:17). அவர்கள்

விசுவாச விலக்கம் அடையும் அபாயத்தில் இருந்தனர்[6] (2:1, 3; 6:1-6; 10:26-31).

அவர்களின் ஊக்கம் இழந்துபோகப் பங்களித்த காரணிகள் யாவை? துன்புறுத்தப்படுதல் என்பது ஒரு காரணியாக இருந்திருக்கலாம் (10:32). இது மிகவும் மோசமாகப் போவதாக இருந்தது (12:4). மேலும் அவர்கள் (ஒருவேளை கிறிஸ்தவர் அல்லாத யூதர்களால்) யூதத்துவத்திற்குத் திரும்பும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர் என்பது தெளிவு. பின்வருவன போன்ற விவாதங்கள் கிறிஸ்தவத்திற்கு எதிராக ஏற்படுத்தப்பட்டன என்பது உறுதி: "கிறிஸ்தவத்தில் பிரதான ஆசாரியர் இல்லை, பலிமுறைமை இல்லை, எருசலேம் போன்ற பெரிய நகரம் இல்லை." இவையாவற்றையும் கிறிஸ்தவம் கொண்டுள்ளது, மற்றும் கிறிஸ்தவத்தில் இவை *மேன்மையானவைகளாக* உள்ளன என்பது (எபிரெயருக்கு நிருபத்தை எழுதிய) எழுத்தாளரின் பதிலுரையாக இருந்தது.[7]

நம்மில் பெரும்பான்மையானவர்கள் யூதக்கிறிஸ்தவர்களாக இல்லை என்பதால், இது நமக்கு நடைமுறைப்படுகிறதா? நாம் யூதக்கிறிஸ்தவர்களாக இராதிருக்கலாம், ஆனால் நாம் அவர்களுடன் தொடர்புடையவர்களாக இருக்க முடியும் என்பது உறுதி. ஒருவேளை நாம் கிறிஸ்தவ வாழ்வை மன எழுச்சியுடன் தொடங்கியிருக்கலாம், ஆனால் காலம் கடந்து சென்றபோது அத்துடன் நமது ஊக்கமும் விலகிப்போயிருக்கலாம். உலகம் அளிக்கும் கேளிக்கை மற்றும் மன எழுச்சியை நாம் தவற விடுகிறோம் என்று அது நமது காதுகளில் குசுகுசுப்பாகப் பேசுகிறது. நாம் நமது வாழ்வின் பழைய வழிகளுக்குத் திரும்பிச் செல்லும்படி சோதிக்கப்படலாம். வேறு எந்த ஒன்றும் வேறு எவரும் அளிக்கக் கூடிய எந்த விஷயத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்கள் மேன்மையானவைகளாக உள்ளன என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் செய்திகளில் ஒன்றாக உள்ளது.

### எழுதியவர்: ஊக்கமூட்டுதலை எடுத்தளித்தது யார்?

எழுத்தாளர் தம்மை (இந்த நிருபத்தின்) அடையாளப் படுத்துவதில்லை.[8] இந்த நிருபத்தைத் தோற்றகாலத்தில் பெற்றுக்கொண்டவர்கள், இதை எழுதியது யார் என்று அறிந்திருந்தனர் (காண்க 13:19), ஆனால் நாம் அவரை அறிவதில்லை.

பல நூற்றாண்டுகளாக, எபிரெயருக்கு எழுதிய நிருபம் பவுலின் எழுத்துக்களில் ஒன்றாகக் கருதப் பட்டிருந்தது. KJV வேதாகமத்தின் சில பதிப்புகளில் பின்வரும் தலைப்பு உள்ளது: "அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயருக்கு எழுதிய நிருபம்." இருப்பினும் சமீபத்திய ஆண்டுகளில், பவுல் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கலாம் என்ற கருத்து கேள்விக்குள்ளாக இருக்கிறது. சிலவேளைகளில் பின்வரும் கூற்று எழுப்பப்படுகிறது: "பவுல் எபிரெயருக்கு நிருபத்தை எழுதி *இருக்க முடியாது.*" இதற்கு நேர்மாறாக, இந்தப் புத்தகத்தில் உள்ள பல வசனப்பகுதிகள், பவுலினுடையவை *போன்று ஒலிக்கின்றன* (எடுத்துக்காட்டாக, 13:22-25), மற்றும் அவர் இதை எழுதியவராக இருக்கவில்லை என்பதற்குத் தீர்மானமான ஆதாரம் எதையும் நான் அறியவில்லை. இவ்விஷயத்தைப் பற்றிய எனது சொந்தப்படிப்பு,[9] எபிரெயருக்கு எழுதிய நிருபம் பவுலினாலோ அல்லது பவுல் செல்வாக்குச் செலுத்திய யாரோ ஒருவராலோ - ஒருவேளை லூக்கா, சீலா, அப்பொல்லோ அல்லது பர்னபா என்பவராலோ - எழுதப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கு என்னை வழிநடத்தியுள்ளது. எனது நண்பர் ஒருவர், "எபிரெயருக்கு எழுதிய நிருபம் தீமோத்தேயுவினால் எழுதப்பட*வில்லை* என்பது மட்டுமே

இதனை எழுதியவர் பற்றி நாம் நிச்சயமாக அறியும் விஷயமாக உள்ளது" என்று கூறினார் (காண்க எபிரெயர் 13:23).

இந்தப் புத்தகத்தை எழுதியவர் யார் என்று அறியாதிருக்கலாம், ஆனால் அவரைப் பற்றிய பல உண்மைகளை நாம் அறிகிறோம்:

- அவர் ஒரு உன்னதமான பிரசங்கியாராக இருந்தார். இப்புத்தகத்தின் பெரும்பான்மைப் பகுதி, எழுதப்பட்ட பிரசங்கமாகவே தோன்றுகிறது.
- அவர் தாம் யாருக்கு எழுதினாரோ, அவர்களைக் குறித்து *அக்கறை கொண்டிருந்தார்*. நமது ஆவிக்குரிய நிலை பற்றி அக்கறைப்படக் கூடிய நண்பர்கள் நம் யாவருக்குமே தேவை.
- அவர் தேவனைச் சார்ந்திருந்தார் (காண்க 4:7; 13:5).

எபிரெயருக்கு எழுதிய நிருபம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டது என்பது, இந்த நிருபத்தின் எழுத்தாளர் பற்றி நாம் அறிய வேண்டிய முக்கியமான உண்மையாக உள்ளது (காண்க 3:7). தேவன் நம்மைக் குறித்து *அக்கறை கொண்டுள்ளபடியால்*, பரிசுத்த ஆவியானவர் இந்த நிருபத்தை நமக்காகப் பாதுகாத்து வைத்தார். அவர் நமக்கு உதவ, நம்மைப்பலப்படுத்த - ஆம், நாம் ஊக்கமிழந்து போகும்போது நம்மை ஊக்கப்படுத்த - விரும்புகிறார்.

**பொருளடக்கம்: ஊக்கப்படுத்துதல் எந்த வடிவை எடுக்கிறது?**

இப்புத்தகத்தின் வடிவமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இது "ஒரு ஆய்வுக்கட்டுரை போன்று தொடங்குகிறது, ஒரு பிரசங்கம் போன்று தொடருகிறது மற்றும் ஒரு நிருபம் போன்று முடிகிறது."[10] ஏற்கனவே குறிப்பிட்டபடி, இப்புத்தகத்தின் பெரும்பகுதியானது, எழுதப்பட்ட ஒரு பிரசங்கமாக இருப்பதாகத் தோற்றம் அளிக்கிறது. இந்தப் பிரசங்கத்தில் பிரசங்கியார், போதித்தல் (விவாதம்) மற்றும் நடைமுறைப் பயன்பாடு (புத்திமதி கூறுதல்) ஆகியவற்றிற்கு இடையில் மாற்றி மாற்றி உரைக்கிறார்:

I. விவாதம்: தீர்க்கதரிசிகள் மற்றும் தூதர்களைக் காட்டிலும் இயேசு மேன்மையானவர் (1:1-14).
II. புத்திமதி (2:1-4).
III. விவாதம்: தூதர்கள் மற்றும் மோசே ஆகியோரைக் காட்டிலும் இயேசு மேன்மையானவர் (2:5-3:6).
IV. புத்திமதி (3:7-4:16).
V. விவாதம்: கிறிஸ்து ஒரு மேன்மையான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பகுதி 1 (5:1-10).
VI. புத்திமதி (5:11-6:20).
VII. விவாதம்: கிறிஸ்து ஒரு மேன்மையான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பகுதி 2 (7:1-10:18).
VIII. புத்திமதி (10:19-13:25).

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை நீங்கள் வாசிக்கையில், இதை எழுதியவர் பொதுவாக, புத்திமதி கூறும் பகுதி ஒன்றிற்குப் பின்னர் தமது

விவாதத்தை எவ்வாறு திரும்பத் தேர்ந்துகொள்கிறார் என்பதைக் கவனித்துப் பாருங்கள். எடுத்துக்காட்டாக, 1:14ன் சிந்தனையை 2:5 எவ்வாறு திரும்பத் தொடங்குகிறது என்பதையும், 5:10ன் சிந்தனையை 7:1 எவ்வாறு தொடருகிறது என்பதையும் கவனியுங்கள்.

ஊக்கமிழந்து போயிருந்த அந்தக் கிறிஸ்தவர்களுக்கு இரண்டு விஷயங்கள் தேவைப்பட்டன: (1) சந்தேகத்தை நீக்கிப்போட பலமான போதனை மற்றும் (2) (கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு) உண்மையற்ற தன்மையை நீக்கிப்போட பலமான ஊக்குவித்தல். எபிரெயர் 5:12-14 இப்புத்தகத்தின் திறவுகோல் வசனப்பகுதியாக,[11] இது அவர்கள் படிக்கத் தவறியிருந்தனர் என்பதே அவர்களின் பிரச்சனையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அவர்கள் தாங்கள் வளர வேண்டிய பிரகாரம் வளராதிருந்தனர்; அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் பக்குவம் அடைந்திருக்கவில்லை.

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த அதே தேவைகளை நீங்களும் நானும் கொண்டிருக்கலாம். எபிரெயருக்கு எழுதிய நிருபம், வலிவான தகவல்களையும் மதிப்புமிக்க ஊக்குவித்தலையும் அளிக்க முடியும். வசனத்தைத் தீவிரமாகப் படிக்கும் மாணவராக இருக்கத் தீர்மானம் செய்யுங்கள் மற்றும் இந்தத் தனிச்சிறந்த நிருபத்தைப் பற்றிய உங்கள் புரிந்துகொள்ளுதலில் வளருங்கள்.

இந்தப் புத்தகம் எப்போது எழுதப்பட்டது என்ற கேள்வியில் மற்ற பின்னணி விஷயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிருபம் எழுதப்பட்ட வேளையில், யூதத்துவப் பலி முறைமையானது இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகத் தோன்றும் (காண்க 9:6-10; 13:10). விஷயம் இப்படி இருந்ததென்றால், இந்தப் புத்தகம் கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்படுதல் நடைபெற்றதற்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம் என்று தேதியிடுவதாக உள்ளது. இருப்பினும், இந்தப் படிப்பைத் தொடங்குவதற்கு, போதிய அளவுக்குப் பின்னணி விஷயங்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன. அடுத்த எடுத்துரைப்பில் நாம், இதன் வசனப்பகுதியைப் பற்றிய நமது படிப்பைத் தொடங்குவோம்.

---

குறிப்புகள்

[1]மக்கள் ஊக்கமிழந்து போகும் சூழ்நிலைகளின் உதாரணங்களைக் கொடுங்கள். [2]நீல் R. லைட்ஃபூட் அவர்கள் செப்டம்பர் 13, 1985ல், டெக்ஸாஸின் ஃபோர்ட் வொர்த் என்ற இடத்தில் விரிவாக்க வகுப்பில் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைப் போதித்தார். இந்த அறிமுகப் பாடத்தில் அதிகமான தகவல்களின் பின்னணி எபிரெயர் 13ல் இருந்து வருகிறது. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 217. [4]எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் சில பகுதிகள், பழைய ஏற்பாட்டைப் பற்றிய அறிவு கொஞ்சமாவது இன்றிப் புரிந்துகொள்ளுதல் சாத்தியமற்றதாக உள்ளன. [5]அவர்களின் வாழ்விடம் பற்றிய யூகங்களில் எருசலேம் மற்றும் ரோமாபுரி ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன. [6]"விசுவாச விலக்கம்" என்பது ஒருவர் தமது மார்க்கத்தை முற்றிலும் கைவிடுதல் என்பதை அர்த்தப்படுத்தும் சொற்றொடராக உள்ளது. [7]"மேன்மையானது" என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது.

*[8]இது, நான்கு சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் நடபடிகள் உட்பட, வேதாகமத்தின் மற்ற சில புத்தகங்ளுக்கும் உண்மையாக உள்ளது. [9]இந்தப் படிப்பிற்கு முன்னர் நான், எபிரெயருக்கு எழுதிய நிருபம் பவுலினால் எழுதப்படவில்லை என்ற நிலைப்பாட்டை ஒப்புக்கொண்டிருந்தேன். படிப்பிற்குப் பின்பு நான், அவரே இதை எழுதியிருக்க அதிக சாத்தியம் உள்ளது என்று முடிவு செய்துள்ளேன், ஆனாலும் எபிரெயர் நிருபத்தை அவர்தான் எழுதினார் என்பது தற்போது நிரூபிக்கப்பட முடியாது.* [10]Neil R. Lightfoot, *Jesus Christ Today* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 43.

*[11]இப்புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி படர்க்கைப் பெயர்ச்சொல்லில் உள்ளது, ஆனால் இது முன்னிலைப் பெயர்ச்சொல்லில் உள்ள மிக தனிப்பட்ட வசனப்பகுதியாக உள்ளது ("நீங்கள்").*